முபஸ்மிலன்

யாலதீபு

நாகூரிலடங்கி உலகமெங்கும் குத்பாய் விளங்கும்

செய்யிது ஷாஹுல் ஹமீது வலியுல்லாபேரில்

# திருக்காரண ஆனந்தக்களிப்பு.

# யாசெய்யிதீ ஷெய்கீமாலே.

## நரகத்தின் வாதை மோட்சத்தின் பாதை

# முனாஜாத்து.

## தலைமுழுகும் நாட்களின் குணங்கள்.

## வெற்றிலையின் நற்குண வசனம்.

---

இவை கோட்டாறு,

பரம்பரையாய் ஷெய்குமார்களிற் சிறப்புற்றோங்கிய

தௌஹீதுக்கடலாகிய நாயகம் காமில்செய்யிதினா

ஷெய்குசெய்னுல் ஆபிதீனில் காதிரிய்யி

வலியுல்லா அவர்களின் பௌத்திரரும்

இஸ்லாமிய மார்க்கம் உபன்யாசருமாகிய

மௌலவி செய்யிது முஹம்மது சாஹிபு

அவர்களாலியற்றப்பெற்று,

இளையாங்குடி சாலைநகர்

பா. மு. மீராப்பிள்ளை மரைக்காயர்,

ம. சே. முஹம்மது தம்பி மரைக்காயர்,

உ. கா. மீ. முஹம்மதுஹபீபு மரைக்காயர்,

பே. ரி. மு. முஹம்மது சிக்கந்தர் மரைக்காயர்,

இவர்களின் பொருளுதவியால்

பரமக்குடி விநாயகன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

மூன்றாம் பதிப்பு.

...ஆ.] 1934 [விலை அணு 0—4—0

முபஸ்மிலன்.

யாலதீபு.

விருத்தம்.

சீர்பெருகுங் காரணத்தால் சிறப்புற்ற நாகூரில்
பேர்பெருங் காதர்வலி பிறபலங் தமிழால்கூற
நேர்பெற ஆதிஅல்லா நித்தனே கிருபைகூர்ந்து
தார்பெற வாக்கருள்சீ தர்ப்பரா காப்புத்தானே.

# திருக்காரண ஆனந்தக் களிப்பு.

காரணங் காணுது தோழி எங்கள்
காருண்ய ஷாஹுல் ஹமீதொலி நாதர்
காரணங் கேளின்னங் தோழி

1. அல்லாஹு அல்ஹம்து லில்லா ஆதி
ஆண்டோனை என்னுளு மன்பாய் துதித்து
நல்லான அஹ்மதை நினைத்து நீதி
நபிமார் அக்தாபை நினைவுடன் வாழ்த்தி
உல்லாச ஷாஹுல் ஹமீது வலிமேல்
உவப்பாக ஆனந்தக் களிப்பிதைப் பாடி
வெல்லுங் கிருபைகள் பெற்று வெகு
வன்மை புரிந்திட மன்னவன் காப்பு (காரணங்)

2. ஆசைக் கடலான ஓசை அது
ஹாவென்ற ஹறுபாலே ஓர்முத் தெழுந்து
நேசமாய் அஹதினைச் சேர்ந்து அந்த
நேர்த்தியாம் சேர்க்கையா லஹ்மதாய் வெடித்து
வேஷமு டன்பல கோலம் தந்தன்
வேஷத்துக் குரியசி பத்தேழுங் கொண்டு
வாசியி லேறித் தெழிந்த எங்கள்
வல்லவன் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

3. அலிபா யுதித்திடு முன்னே ஆதி
அருள் கொண்ட நுக்தாவி லுருவாகி வந்து
கலிமாவெனும் ஹர்பு மூன்றில் ஒன்றை
கருவாக தெரிந்தின்பங் கொண்டிடும் நீதர்
நலியாத வணக்கத்தி லாகி நாளும்
நலமான கல்பினி லொளிவா குஞ்சுடராய்
மெலியாம லுறப்பிக்கு முருவாய் வந்த
மெய்யான ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

4. குன்னென் றெழு படைப்பும் படைத்த
குகாயிறசூல் நபிபேரரு மிவர்தான்
மன்னவனக் தாபு முஹியித் தீனி
வழிபதி மூன்றி லுதித்தவ ரிவர்தான்
எண்ணிய யெண்ணங் கொடுத்து கோடி
யாகிய காரணத் துடையவ ரிவர்தான்
முன்னில்லை பின்னில்லை யாவும் அறிந்த
மேலான ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

5. எஞ்சா னுயரத்தின் கோட்டை அந்த
இயல்பான கோட்டைக்கு ஒன்பது வாசல்
துஞ்சாத கேட்டு நாலேழும் அங்கு
துய்தான கிணர்குளம் மலை யொன்பதுண்டு
அஞ்சாடு வேட்டைக் காயுண்டு நல்ல
அழகான வீடாறு துறைமக் களுண்டு
வஞ்சக ரிதை யறியார்கள் வன்மை
வாகான ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

6. திருவாரூ ரெனும்பதி தன்னில் காபிர்
திரண்டங்கு தேரொன்றை கூடி யிழுக்க
குருவாக சென்றீ ரவ்வழியில் அங்கு
கண்ட வரெல்லாம் விலகென் றுரைக்க
உறமாக நடந்ததா லவர்கள் தம்மை
உறுக்கிப் பிடித்தவன் கண்ணு மறைந்து

திறமான கல்லைப்போலத்தேர் ஆக
செய்திடும் ஷாகுல் ஹமீதொலி நாதர் (காரணம்)

7. கீழக்கரையெனு மூரில் தாங்கள்
கூடிய நாற்பது பகீருடனேகி
மேலாயிருக்கின்ற ஞளில் மிக
வந்திடுந்தாகத்தா லங்குள்ள வீட்டில்
சீலமாய் கேட்டிட எல்லாம் உப்பு
தண்ணீரென்றுரைத்து ஈயாதிருக்க
ஆளுமிறை என்னுளு மதுபோல்
ஆகவே செய்திடும் ஹமீதொலி நாதர் (காரணங்)

8. மங்கமா சாலையின் செட்டி வெகு
மேலாக தங்கள் சமுகத்தை நாடி
சங்கையாய் நேர்ந்திட்ட ஆட்டை அங்கு
திருடிய மூவரின் கண்ணும் மறைந்து
பங்கமாயாவருங்காண மிக
படுந்துயர் பொறுக்காம லொன்பது ஆடு
பொங்கமாய் நேர்ந்திட்ட உடனே கண்ணை
புகழாக கொடுத்திடும் ஹமீதொலிநாதர் (காரணங்)

9. ஆவலாய் இடைச்சியும் வந்து எனக்
கன்பான புருஷனுர் பிணங்குக்குப் போகி
மேவிய வருஷங்க ளேழாய் நானும்
வேறு முகங்களை பாராம லிருந்தும்
காவியே என் இனத்தார்கள் மறு
கலியாணம் முடிக்கவே தொந்திரவு செய்ய
கூவியே இரு வாரம் தவணை அவர்க்கு
கொடுத்திங்கு வந்தேன் ஹமீதொலிநாதர் (காரணங்)

10. கொடுத்தது போலவே எந்தன் சொந்த
கணவனை தருவித்து தாருங்க ளெங்க
திடுகூரு யன்று ராவவனுக்கு பிணங்கில்
தீர்ச்சையாய் காட்சி கிடைத்திட்ட உடனே

துடியாக நாவாயி லேறி அவள்
சொல்லிய நவணைக் குள்ளாகவே இங்கு
தடங்கலில் லாமலே வந்து சேர
செய்திடும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

11. முகத்தினி லிருக்கின்ற கண்ணை மிக
ஒழுங்காக முறுக்கித் திருத்தியே நல்ல
அகத்தினி லிருக்கின்ற கண்ணை வெகு
அழகாக அறுத்துப் பிளந்ததின் பின்னால்
வகுத்துத்தா னிருக்கின்ற ஜோதி மணி
விளக்கது மெத்த முழக்கமாய்த் துலங்க
தொகுத்ததின் சுகங்களை பெற்ற எங்கள்
துய்யவன் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

12. தென்காசி என்ற ஊர்தன்னில் சிலநாள்
தங்கியே பகீருட னிருக்கின்ற காலம்
அங்குள்ள கொடுமையால் பஞ்சம் பிடித்து
அருந்தவே யாதொன்றுங் கிடையாத வேளை
தங்கள் பகீரான பேர்கள் யேதும்
தேடிடக் கிடையாமல் கோயிலின் மாட்டை
சங்கையா யறுத்தவ ரெல்லாம் கூடி
தின்றார்கள் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

13. தின்றபின் மாட்டையுந் தேடி மிக
துடியாக வந்தார்கள் காபிர்கள் கூடி
கண்டார்கள் தோலுட னெலும்பை அங்கு
கண்டபின் கூக்குரல் மிகுதியாயாக
சண்டை களில்லாமல் தாங்கள் எலும்பை
தோலுடன் சேர்த்துக் குவிக்கவே யேவி
தண்டா லடித்துயிர் கொடுத்த எங்கள்
துயிதான ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

14. மக்கமா நகரத்தில் சென்று தாங்கள்
மன்னவ னருள் பெற்று வருகின்ற வேளை

பக்கத்தில் நசாருக்கள் வந்து தாங்கள்
புகழான வலியாக இருப்பீர் களானல்
தக்கவித மான கிரும்பு அதில்
தங்கி யிருக்கும் மரத்தினிலொன்றை
ஷக்குக ளில்லாம லிப்போ வருத்தி
தாருமென் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

15. என்றுதான் கேட்டிட அங்கு உள்ளோர்
இணங்கியே கேட்கும் விதம்போல் வருத்தி
நின்றிட மரத்தையுங் கண்டு அந்த
நசாருக்கள் யாவரும் புதுமை யடைந்து
கண்டவுட னவரெல்லாம் தங்கள்
கரத்தைப் பிடித்தவ ரிஸ்லாத்தில் வந்து
ஒன்றுன ஆதியைத் துதிக்க மிக
ஒழுங்காகச் செய்திடும் ஹமீதொலி நாதர் (காரணங்)

16. ஹுவது தாயிமதாக எங்கும்
ஹுவது காயிம தாகியே நின்று
ஹுவது ஹாளிறுமாகி அந்த
ஹுவது நாளிறுமாகத் துலங்கி
ஹுவது முஷாஹதாவாகி துய்ய
ஹுவது வுஜுது மாகவே பொங்கி
ஹுவது முயீனுமதாகி வந்து
குலாவிடும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

17. உங்களின் தர்காவில் வந்து மிக
ஒழுங்காக யாவரும் பாத்திஹா ஓத
அங்கு தரித்திட்ட ஒருவன் அந்த
அஹ்மது என்பவர் குடையைத் திருடி
கங்கையின் கரையினில் வந்து ஒரு
காபிர்க்கு விற்றவுடனவன் கண்ணை
அங்கயே குருடாக்கி எல்லாம் கண்டு
அறிந்திடச் செய்திடும் ஹமீதொலி நாதர் (காரணங்)

18. அன்னையின் கெர்ப்பத்தில் தாங்கள் மாசம்
ஆருன போதையில் நயிகிலுறு வந்து
மன்னவன் சலாமையு மோதி அவர்
மறைவான பஜ்றுலே ஒலுவுக்காய் தாயார்
தண்ணீரு வேண்டு மென்றங்கு உகப்பாய்
தேடியே கலசத்தை தாம்பினிற் பூட்டி
அன்னலாய் கிணத்தினி லிறக்க கயி
ரறுந்திட ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

19. நேரமுமாகுதே என்று தாயார்
நின்று தயங்கவே யகட்டினிலிருந்து
கூறுயென்னைச் சுமைகொள்ளு மன்னே
கவலைப் படாதே நீருடந் தோண்டி
நேர்த்தியாய் உங்களின் முன்னி லிருக்க
நோக்குங்க ளென்றிட சப்தத்தைக் கேட்டு
சீராயெடுத் தொலு செய்து ஸுப்ஹை
தொழுதிடச் செய்திடும் ஹமீதொலி நாதர் (காரணங்)

20. மாதமும் ஒன்பது ஆக தங்கள்
மாணிக்க பூரிலே கள்ளர்கள் வந்து
தேசமுஞ் செய்தங்கு வெட்டி மிக
தீவினை செய்வதை யறிந்திடத் தங்கள்
மாதாவும் பயந்தங்கு கதவை மூட்டி
முகஞ்சாம்பி நிற்கவே கெர்ப்பத்தில் நின்றும்
பேதகமில்லாமல் தங்கள் தாயசர்
பார்க்கவே இறங்கிடும் ஹமீதொலி நாதர் (காரணங்)

21. இறங்கியே வாலிப ரூபங் கொண்டு
இனிமையாய் வெளிவாயி லாகியே நிற்க
உருவான குதிரையி லொன்று அங்கு
உடையோனின் கிருபையால் முன்னிலாக
உறமாக யதன் மீதிலேறி தாங்கள்
உட்கார்ந் திருக்கவே வாளொன்று கையில்

திறமாகக் கிடைத்திட கள்ளர் முன்னில்
சென்றிடும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

22. சென்றங்கனே கரை வெட்ட அங்கு
சேர்ந்திடும் மஜூஸி காபிர்க ளதனை
கண்ட வுடனவ ரெல்லாம் மிக
கல்பு நடுங்கி திடுக்கிட சிக்கை
வெற்றியுடன் கொடுத்தனுப்பி தாங்கள்
வீட்டிற்கு வந்திடத் தாயார்கள் கண்டு
நன்றாய் யெழும்பிட முன்னே யகட்டில்
னுழைந்திடும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

23. பெட்ட குளந்தன்னி லுள்ள மூசா
பதிவாக தங்களுக்காகவே நேர்ந்து
திட்டமாய் குறித்திட்ட பவனை லுத்த
தனத்தினுல் தன் வீட்டு நகையுடஞ் சேர்த்து
பெட்டியில் வைத்திட்ட கள்ளர் திருடி
போகியபின் னுலவரதை யுணர்ந்து
கெட்டியாய் கிடைத்திட்டால் நகையில் பகுதி
கொடுத்துநான் கந்தூரி செய்கிறேன் நாதர் (காரணங்)

24. என்றவர் உருதியாய்ச் சொல்ல மறுநாள்
இரவினில் கள்ளர்கள் நகையுடன் வந்து
நின்றவர் பாதத்தில் வீழ்ந்து நாகூர்
நாயகர் பவனுடந் திருடிய தாலே
இன்றவர் குதிரையில் வந்து அடித்து
இங்கு கொடுக்கவே சொன்னுர்களென்க
அன்றங்கு யாவரும் புதுமை யாக
அறிந்திடச் செய்திடும் ஹமீதொலி நாதர் (காரணங்)

25. அலங்கார மாகிய கோட்டை தன்னில்
ஐந்து வகையான பட்சிகள் மேயும்
துலங்கிய பட்சிகளைந்தும் காட்டில்
துடியாக பறக்குமுன் பழகிப் பிடித்து

இலங்கிய மாளிகைக் கூட்டி லடைத்து
இறையவன் கனியூட்டி ஆங்கார மைந்தை
கலங்காம லொன்றினி லடக்கி காட்சி
கண்டிடும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

26. பேரான அறபுநாடு தன்னில் மிக
புகழாக ஒன்பது ஹஜ்ஜையும் செய்து
சீரான பொன்ஞணி ஊரில் வந்து
சேர்ந்திட அக்தாபு முகியித்தின் ஜீலான்
நேசான பேரராய் விளங்க அங்கு
நேர்த்தியா யிருந்திடும் மக்தூமு சாஹிபு
நேரென்று நம்பாமல் தங்கள் முன்னில்
நவின்ருர்கள் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

27. வன்மையாய் பேரரா யிருந்தா லெந்தன்
ஒழுங்கான தோப்பிலே பலாமர மொன்று
புன்மையாய் காய்ந்து தானிர்க்கு மது
பசுமையாய் தழைத்திப்போ பழங்களுமிருந்தால்
உண்மையாய் பேரர்தா மென்க அந்த
உடனுங்கள் கண்ணுலே பார்த்திர்க ளப்போ
துண்மையாய் தழுத்ததில் பழமும் ஜொலிக்க
செய்திடும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

28. குட்டமுடன் குறை நோய்கள் நித்தம்
குணங்க ளில்லாத பெருநோய்க ளுடையோர்
திட்டமா யுங்களின் முன்னில் சிலநாள்
தரித்தவ ரிருகையை யேந்தியே கேட்க
பட்டாங்க மாயுங்கள் பொருட்டால் துய்யோன்
பழுதுக ளில்லாமல் சுகமாக்கச் செய்தே
மட்டி லடங்காத கார ணங்கள்
விளைவிக்கும் ஷாஹுல் ஹமீதொலி நாதர் (காரணங்)

29. வல்லோனே உன்னருள் கொண்டு மிக
மகிழ்ச்சியா யிதைப்பாடி சேகரித் தோர்க்கும்

நல்லாக இம்மாலை தன்னை படித்து
நன்னுட்டங் கேட்டுது ஆயிரப் போர்க்கும்
சல்லாபர் நபிபொருட் டாலும் இன்னும்
ஷாஹூல் ஹமீதொலி பொருட்டாலும் வல்ல
அல்லாஹூ நீபிழை பொருத்து உந்தன்
அருளான றஹ்மத்தை நல்கிட ஆமீன் (காரணங்)

## முபஸ்மிலன்.

மாதிஹூர்ரசூல் ஷெய்கு சதகத்துல்லா அப்பா அவர்கள் நம்முடைய நாயகம் குத்துபினு செய்யிது ஹசன் குத்தூஸ் செய்கு ஷாஹூல் ஹமீது வலியுல்லா பேரில் சொல்லிய, யாசெய்யிதீசெய்கீ இதை அதே லயத்தில் பாடலாயுரை செய்யும்படி பிறவிகளில் சிலர் கேட்டுக் கொண்டமையால் உலமாக்களின் காதிமாகிய செய்கு செய்யிது முஹம்மது சாஹிபா லுரைசெய்யப்பட்டிருக்கிறது.

# யாசெய்யிதீ ஷெய்கீமாலை.

### மதுன்வி இராகம்.

யாசெய்யிதீ ஷெய்கீ வஸத்றஸ் ஸாதிரி
கன்ஸல் உலூமி வறப்ஸ இல்மின் நாதிரி

(1) அரிதான எல்லா இல்முகட் கிடையாளமே
அருளான இல்மின் புதயலே தயாளமே
அறிவையுடையோர் முன்னிலை பொற் பவளமே
ஆதிதூதர் பேரர் அப்துல் காதிரி

மற்லிய்ய மௌலா ஹூல்கரீமில் காதிரி
யாசெய்யி தஸ்ஸாதாத்தி அப்தல் காதிரி
(2) தகுதியான வருசையுள்ள நாயகா
சங்கை பொருத்த மானஎங்கள் தூயகா
மகிமையுடைய பேர்களுக்கு தாயகா
வருசை மிகுதி யானஅப்தல் காதிரி

கஹ்பல்ல ஹீபி அமான கல்பின் ஹாதிரி
மஉவல்லகிபி எமான கஸ்தின்ஞதிரீ
(3) பதறி நடுங்கும் மனிதரின் கார்மானமே
பாவிசஞ்சலத் தோர்களுக் கமானமே
கதத்தை நாடு மேழை யொதுங்குந் தானமே
காணிக்கை யோர் பிணே யானஅப்தல் காதிரி

கௌதல்லதீ பில்பஹ்ரி கான கஆதிரி
யாசெய்யி தஸ்ஸாதாத்தி அப்தல் காதிரி
(4) கடலில் சறுகி அமிள்வனே ரெசித்தவா
கருணையுடைய பேர்களுக்குடை கொடுத்தவா
திடமுடனே ஆதி நாமம் தரித்தவா
தீங்கை யோட்டும் செய்கு அப்தல் காதிரி

கம்மின் கருமாத்தின் பதத்லின்ஞளிரி
வகவாரிகில் ஆதாத்தி இன்தல் ஹாஎிரி
(5) இந்த உலகின் வழமை தனக்கு மாத்தமாய்
எத்தனேயோ அர்ப்புதங்கள் சுத்தமாய்
வந்து கண்டு உறுதிகொள்ள சித்தமாய்
வருத்துங் காறணீக அப்தல் காதிரி

வஹூலாக்க மாலாத் தின்பிவஜ்ஹின் ஞாஎிரி
லகசெய்யிதீயா ஷெய்கு அப்தல் காதிரி
(6) ஆண்டவன்திரு சமுகம் பெற்றருளிலங்கவும்
அதிக ஒளிவு கொண்டாபறணம் துலங்கவும்
தூண்டாமணி முகம்கண்ட பேர்கள் கலங்கவும்
துன்பம் நீக்கெனே யாளும் அப்தல்காதிரி

மின்சுல்பி நஸ்லிறகூலிறப்பின் காதிரி
மின்னஹ்ஜி முஹியித்தீனி அப்தல் காதிரி
(7) வல்லநாயன் நபி முகம்மது ஒளிவினுல்
வன்மையுடனே இறங்கி மகவின் முதுகினுல்
நல்லார்கள் போற்றும் முகியித்தீனின் வழியினுல்
நாகூரு தனக்காயுதித்த அப்தல் காதிரி

கௌதில் மஷாயிகி நூரிபத்ரின் பாதிரி
யாத்தய்யிபன் பித்தாத்தி அப்தல் காதிரி
(8) பீரான ஷெய்குமார்களின் ரெட்சகராய்
பேரான பூரண மதியொழி வுற்றவராய்
நேரான குத்துபு தஸ்தகீரின் பேராய்
நேர்த்தி உள்ளமைகொண்ட அப்தல் காதிரி

ஜாஹத்த பில்லாஹில் முகீனில் பாத்திரி
பில்பாத்தி னிஸ்லாபீ வஹாஸ்னில் காத்திரி
(9) படைத்தயிறையோன் றனக்குசெய்யுந் தவத்தினுல்
பாதகன் னிபுலீசி னூசாட்டத்தினுல்
திடனுக போராடித்த நபுசை திருத்தினுல்
ஜெயமாமென தெண்டித்த அப்தல் காதிரி

வகியாரி அஃமாலின் வதம்கின் மாத்திரி
யாமுதிறல் குறுபாத்தி அப்தல் காதிரி
(10) சொரியு மழைபோல் கண்ணிணீரை ஒட்டியே
சோரமன்றி அமல்களெல்லாம் நீட்டியே
அரிதான வணக்கம் யாவும் நபுசுக்கூட்டியே
ஆண்டவன்னருள் பெற்ற அப்தல் காதிரி

வஉஸூபத்திஸ தாபத்வதக்வல் காபிரி
வஸ்ஸாஹ்தி பித்துன்யா பிகல்பின் நாபிரி
(11) விவாகம் நீக்கியெ துய்யவன் தக்வாவினுல்
வெறுத்து துன்யாவிட்ட சபபின் வாழ்வினுல்
ஹவாவை விட்டு விரளசெய்யும் கல்பினுல்
ஆண்டோனை தெண்டித்தீர்க ளப்தல் காதிரி

வல்ஹாப்பி வில்மௌ லாபிஷௌகின் வாபிரி
யாசாமியாரிப் ஆத்தி அப்தல் காதிரி
(12) பேராசை கொண்டு பெரிய நாயனை தேடியே
பேரின்ப உகப்பை பெரியதாக நாடியே
ஊராசை உற்றாராசை யாவும் மூடியே
உருகி நாயனை தேடும் அப்தல் காதிரி

கம்ஸாற றௌலக்க மின்ஷரீபின் காபிரி
மின் ஆலிமின் அவ் பாளிலின் அவ்தாஜிரி
(13) கல்வி வருசைகளோங்கு மனித ரெத்தனை
கஷ்பை உடைய பாளிலீங்க ளெத்தனை
இல்மாளிஹாகமா வர்த்தகர்க ளெத்தனை
இணங்கி தெரிசனை செய்யு மப்தல் காதிரி

ஹத்தன்னசாறா பல்பறா மன்காசிரி
யாமுப்த்திலல்ஆ ஹாத்தி அப்தல் காதிரி
(14) நசாறா எகூதி பறாமணர்க ளெத்தனை
நஷ்டத்தி லான மாறுஜாதிய ரெத்தனை
உஷாறாக வந்துதங்கு மனித ரெத்தனை
உதவாத நோய்களகற்று மப்தல் காதிரி

யாசாகி பன்னுஹாறி குன்லி நாஸிரி
பிஸ்ஸம்யி வல்அஃ ளாவஹாஸ்னில் பாசிரி
(15) பார்வை கேள்வி உறுப்புகளிலும் நிறப்பமாய்
பதிவாக எனக்கு உதவிசெய்யும் வலுப்பமாய்
நேர்மையான செய்யிதே வெகு விருப்பமாய்
நேர்த்தி நாகூராளும் அப்தல் காதிரி

வபிதூலி உம்ரின் லாபிஉம்ரின் காஸிரி
யாமஜ்மஅல் கைறாத்தி அப்தல் காதிரி
(16) நன்மை எல்லாஞ் சேர்ந்துகூடுந் தானமே
நபரெல்லோரை கார்க்க வந்த பாலமே
வன்மையாய்நீ ளாயுளைத்தந் தாளுமே
வள்ளலெங்கள் செய்கு அப்தல் காதிரி

குன்லீமலாதன் யௌமபக்ரில் பாகிரி
லிஷதாயிதித்துன் யாவயௌமின் ஆகிரி
(17) அளியும் துன்யா கஷ்டம் யாவும் நீக்கியே
அளியாத ஆகிறு நாளிலென்னை நோக்கியே
சலியாத பெருமை அடைந்தபோலாளாக்கியே
தருதியாயெனை கார்க்கும் மப்தல் காதிரி

வதகீறத்தன்லீ யௌம துக்ரித்தாஹிரி
யாஆலியர்ருத பாத்தி அப்தல் காதிரி
(18) நல்ல அமலை தங்கரீகஞ் செய்தபேர்
நலவான பாக்கியமடைந்த போதையிலெனக்கு நீர்
வெல்லுந்தங்கரிப் பாயிருந்து என்னைக் கார்
மேலான பதவிபெற்ற அப்தல் காதிரி

சல்லல் இலாகு அலன்ன பிய்யித்தாஹிரி
வல்ஆலி திக்று ஹூம்தகீறது தாகிரி
(19) வல்லோன் தூதர் நபிகளுயகர் பேரிலே
வன்மையான ஆல்கள் மீதும் பாரிலே
அல்லா சலாத்து சலாமருள்வான் நேரிலே
ஆதிறஃமதுற்ற அப்தல் காதிரி

வஸ்ஸஹ்பி வத்துப்பாகி அஹ்லிம பாகிரி
வஅலைக்கும்யா செய்கு அப்தல் காதிரி
(20) அருளான அஸ்ஹாப் துயர்ந்த பேர்கள் மீதிலும்
அக்த்தாபுஅவுலி யாக்கள் பேரியோர் மீதிலும்
அருமை நபியின் பேரர் தங்கள் மீதிலும்
ஆதிஸலாத்துண் டாகஅப்தல் காதிரி

(ஸம்பூர்ணம்.)

## முபஸ்மிலன்.

# ஆதி நிலை.

---

### கண்ணிகள்.

1. ஆதி திருஒளி அஹதியத்தெனும் பொருள்
அறிந்து தெளிவது மெப்போ எப்போ
சோதி முஹம்மது சுகிர்தமறை தெரிந்து
சோபனம் பெறுவது மெப்போ எப்போ

2. அஞ்சாறு மொன்ருய் ஆதிதியானத்தா
லறிந்து தெளிவது மெப்போ எப்போ
வஞ்சனிபுலீசை நெஞ்சை பிளந்துநாம்
வணக்கங்கள் செய்வது மெப்போ எப்போ

3. கலிமா கருவினை கமலக் கண்ணுடியை
கண்டு களிகூற லெப்போ எப்போ
வலிமாரக்த்தாபி னுபதேசம் பெற்றுனன்
உண்மை புணர்வது மெப்போ எப்போ

4. வோடிதிரியும் நெஞ்சை யோடாம லடக்கினுன்
உறுதிபடுத்துவது மெப்போ எப்போ
பேடிகளிம்பத்தா லுன்னையே மறக்காமல்
பிரியமாய் காத்தரு ளிப்போ இப்போ

5. தொழுகும் முறைதெரிந்து ஸ்தோத்திரஞ் செய்துனன்
துக்கங்கள் நீங்குவது மெப்போ எப்போ
அளுது முறைதெரிந்து ஆனந்தங் கொண்டுனன்
அம்பல மேறுவது மெப்போ எப்போ

6. என்னினிலிருக்கு மமிர்த மருந்தினன்
ஆனந்தங் கொள்வது மெப்போ எப்போ
என்னேயே இளந்து உன்னினி லொளித்து
இன்பங்கள் பெறுவது மெப்போ எப்போ

7. வில்லதையூன்றி விசயதை தெறித்து
விண்ணினி லூணுவது மெப்போ எப்போ
கல்லுகள் போன்றதை வணக்கங்கள் செய்யாமல்
காத்தரு ளாண்டவா இப்போ இப்போ

8. வாசியை சுளிமுனே தன்னினி லிருத்தியே
வாசங்கள் பெறுவது மெப்போ எப்போ
நேசமாய் லாயிலா ஹாவென்று நவின்று நான்
நீயாக ஆகுவது மெப்போ எப்போ

9. சாரமுன்னசம் சாரக்கடலே ணன்
தாண்டி கரைசேருவது மெப்போ எப்போ
சோர்வில்லாமலே ஸுகிர்த கலேயருந்தி
சுகித்திடச் செய்தரு ளிப்போ இப்போ

10. அம்பலமேறியே அஹதியத் துஹதாய்
அல்லல்கள் நீங்குவது மெப்போ எப்போ
கெம்பீரமாகிய வாஹிதிய்யத்தாகவே
குதாயிடங் கூடுவது மெப்போ எப்போ

11. பொய்யே மிகுந்திடும் புதர்பாவி யாதலால்
பிழையை பொருத்தரு ளிப்போ இப்போ
கையாலணைத்தென்னை மெய்யினி லிருத்தியே
காட்சிகள் கொடுத்தரு ளப்போ அப்போ

12. நாசினுனி கடந்து நாசமாய் போகாமல்
வாசிவசப் படுவது மெப்போ எப்போ
தேசி நடை நடக்கும் சுழிமுனை நாசியின்
னுணியினில் மறிப்பது மெப்போ எப்போ

13. தப்பிதமாகிய தலத்தினில் நின்று நான்
தயங்காமல் காத்தரு ளிப்போ இப்போ
ஒப்பரவாகிய ஹூப்பினில் சேர்த்தென்னை
உலாவிட செய்தரு ளப்போ அப்போ

14. பாங்காக கல்பெனுங் கண்ணுடிக்குட் முகம்
பார்த்து னிருப்பது மெப்போ எப்போ
தூங்காமல் தூங்கினன் தொழுதெனக் குன்னருள்
தோன்றிடச் செய்தரு ளிப்போ இப்போ.

(முற்றிற்று)

முபஸ்மிலன்.

## நரகத்தின் வாதை, மோட்சத்தின் பாதை.

மதுனவி இராகம்.

1 சகலபுகழும் உனக்கு சொந்தம் றப்பனு
சகல உலகை படைத்தவாயா ஹஸ்பனு

2 சல்லி சல்லிம் பாரிக்கன்றப் பஸ்ஸலாம்
குல்ல அவ்காத்தின் அலாகை ரில் அனும்

3 ஒன்றுமில்லா திருக்க நாங்கள் ஆதியில்
உண்டு செய்தாய் எம்மைமனிதர் ஜாதியில்

4 தகப்பன் முதுகில் தாயின் நெஞ்சில் மனியதாய்
வகைப்படுத்தி வன்மையுடனே இனியதாய்

5 பிந்தியதனை தாயின் கெர்ப்பம் போகியே
இந்த விதங்க ளானபேத மாக்கியே

6 நரம்பும் தோலும் உதிரம் சதையும் எலும்புமாய்
உருவமாக்கி உயர்த்தியான சுரூபமாய்

7 கேட்க காதும் பார்க்க கண்ணும் கூர்மையாய்
தாழ்மையில்லா நிஃமதுடனே சீர்மையாய்

8 மொழிய வாயும் நாவும் தொண்டை சித்தமாய்
தெளிவாய் மூளை மூக்கு மண்டை சுத்தமாய்

9 பிடிக்க எடுக்க கையும் விரலு மாகவே
நடக்க ஓட நிர்க்க காலுமாகவே

10 சகல உறுப்பும் செவ்வையாக படைத்துநீ
புகழ்ந்து வணக்கம் செய்ய உயிரை கொடுத்துநீ

11 ஒன்பதாவது மாதம் அல்லது முடிவிலே
துன்பம் நீக்கி உன்றன்குதுறத் தடியிலே

12 தாயின் வயிற்றை விட்டுவெளியில் வருகவே
நாயனேஉன் கிருபை மிகவும் பெருகவே

13 அன்னை தந்தை மனதிலாசை பூட்டியே
இன்னும் கஷ்டம் துன்பமெல்லாம் ஓட்டியே

14 இரவும் பகலும் எங்கள் தேட்டமாகவே
இருக்கச்செய்தாய் தங்கள் நாட்டமாகவே

15 பல் முளைக்கும் வரையில் பாலை ஊட்டியே
பலவிதமாய் பின்பு அன்னம் கூட்டியே

16 ஈ எறும்பு யேறிடாம லெங்களை
ஈரம் சூடு ஆகிடாமல் தாங்களே

17 நாங்கள்மல ஜலங்கள் செய்தால் சுத்தமாய்
பாங்குடனே கழுகிமுத்தி சித்தமாய்

18 பொன்னால் நகையும் உயர்ந்த உடுப்பும் மாட்டியே
வன்ன ராகம் பாடி தொட்டி லாட்டியே

19 உறங்கவைத்து அவர்கள் தங்கள் வேலையை
திறமையாக செய்யுமான போதயே

20 விழித்துவிட்டா லோடிவந்து தூக்கியே
தழுவி என்னை முத்திராகம் பாடியே

21 அணைந்து பாலும் தந்துமெத்த புகட்சியாய்
இணையில்லாத பிரியம்செய்து மகிட்சியாய்

22 மெல்ல மெல்ல நடந்து உங்கள் வாயினால்
சொல்ல ஒவ்வோர் வார்த்தையாக ஆயினால்

23 குளறிப் பேசி தளர்ந்து நடக்க கண்டவர்
அளவறாத இன்பம் மகிட்சி கொண்டவர்

24 தளதளத்த உடையும் உணவும் கொடுக்கவும்
வளரும் பிறைபோல் உடலும் வளர்ந்து நடக்கவும்

25 இந்த விதமாய் நாயனே நீ வளர்க்கவும்
என்றன் வயது இணங்கி பதினாறுகவும்

26 புத்தியோடு பிரித்தறிந்த மாத்திரம்
பத்தியோடு உனையறிந்து தோத்திரம்

27 செய்யுமான வணக்கம் யாவும் தரணியில்
செய்யும்படியாய் யேவிவிட்டாய் மறையினில்

## உபதேசங்கள்.

28 அறிந்த உலமா முன்னில்சென்று யாவரும்
இரையோனுரைத்த படியேநீங்கள் கேட்டிடும்

29 ஸீனுசென்றும் இல்மைத்தேடு என்றுநம்
சிறந்தநபியு மொழிந்தசொல்லை யுணர்ந்திடும்

30 ஹதீது கேட்டா லாதிவணக்க மிகுதமாய்
அடர்ந்தபாவம் நீங்கிவிடுமே ஜல்தியாய்

31 விரும்பிவஃளை கேட்கநாடும் மூமின்கள்
வீண்பேச்சு தூக்கம் விட்டுணர்ந்தே கேளுங்கள்

32 முஹம்மதென்ற நாமங்கொண்ட நாயகம்
முஹப்பதுடனே மொழிந்தசொல்லை கேட்டிடும்

33 ஈமானையுடைய எந்தனும்ம தீங்களே
இன்பமான சுவனபதியின் தோப்பிலே

34 ஆசையுடனே போயிநீங்கள் யாவரும்
அருந்துங்களென்ற சமயங்கேட்டார் சஹாபியும்

35 அங்கமான சுவனபதியின் தோப்புகள்
இங்கே எங்கே இருக்குதென்று உரையுங்கள்

36 என்றுகேட்க ஹதீதுசொல்லும் மஜ்லிசென்
றிறயோன்தூதர் சொன்னமொழியை யுணருங்கள்

37 ஹதீதுகேட்டு அமல்கள் செய்தோர் கோடியே
அதாபுஇழந்து ஜெயமடைந்தோர் கோடியே

38 மறயைஉணரா மதியுங்கேட்ட மனிதரே
மானிலத்தில் மௌத்தைமறந்த பேயரே

39 ஒருகால் நிலத்தில் வைத்துமறுகா லெடுக்கமுன்
உன்றனுயிரை மலக்குவாங்குவ தேதிடன்

40 இந்தவிதமாய் குறைந்தவாணுல் கொண்டுநீ
இந்த்உலகம் சதமென்றெண்ணு ருயேநீ

41 பினங்குபெங் கூன்சிங்கப்பூரு போகிருய்
பெரியஊரு கொளும்புதேசம் போகிருய்

42 மக்காமதீனு மிஸ்றுஷாமு போகிருய்
மலயாளம்லண்டன் றூமுதேசம் போகிருய்

43 மேதினியி லெங்கும்சபறு போகிருய்
மீண்டுதிரும்பி வீடுவந்து சேர்கிருய்

44 பெரியசபறு போனுல்திரும்பி வருவியா
பிசகாத மௌத்தை மறந்துகெட்டபேஹயா

45 சின்னசபறுக் காககட்டு சாதங்கள்
தேடிப்பேணி வைத்துக்கொள்ளு றீருகள்

46 பெரியசபறுக் காககட்டு சாதங்கள்
பேணிவய்யா திருந்தமுளு மோடர்கள்

47 இவிடம் விட்டு போன பின்பு உணருவார்
எங்கித்துடித்து எண்ணிஎண்ணி உளறுவார்

48 சந்தைக்கூட்டம் போலேஇந்த உலகம்காண்
சகலமனிதர் கூடிபிரி வாரேகாண்

49 வீடுகாடு பெண்டுபிள்ளை யாவுமே
விரும்பிவைத்த சொத்தும்சுகமும் நீங்குமே

50 திட்டமாக மௌத்து வந்த நேரமே
தேடிவைத்த முதலும் மனையும் சொல்லுமே

51 தேடிவைத்தாய் தீங்கையுடைய மனிதனே
துய்யோன்வழியில் சிலவுசெய்யா கேடனே

52 எனக்குஎனக்கு வேண்டுமென்று தேடியே
ஏங்கித்துடித்து யாவுமிழந்து செத்தியே

53 சாவும்சமயம் உலகின்வஸ்து யாவுமே
சகருத்துக்குதவு மோதெளிந்து சொல்லுமே

54 எனக்குஎனக்கு வேண்டுமென்று தேடுறாய்
எவ்வளவு போலேதின்று தூறுவாய்

55 தின்றுதூறி போனவர்கள் யாவரும்
சற்றுங்கொண்டு போனதில்லை அறிந்திடும்

56 பெண்டுபிள்ளை பெரிதுஎன்று எண்ணியே
பெரியவீட்டின் அமலைமறந்து போறியே

57 ஞானிஎன்று தொகைவணக்கம் விடுகிறாய்
யோனிகண்டு மிருகம்போலே மயக்கிறாய்

58 ஞானிஎன்றால் ஞாபகத்தை மறப்பியா
யோனிக்கடுமை செய்துஇபூலி சாவியா

59 ஆர்ப்பினளவு நல்ல அமலே செய்தாலும்
ஆர்ப்பினளவு கெட்ட அமலே செய்தாலும்

60 ஆதிறப்பு அனுவளவும் பிசகாமல்
அதர்க்கும்கூலி தருவேனென்ருன் மறைதனில்

61 மண்ணையாண்டோர் மண்ணிலும்கன கோடியே
மானிலத்தை இனி யாள்பவர்கள் கோடியே

62 கோடிகோடி மானிடர்கள் மாண்டதும்
வீடுவிட்டுக் காடுபோன துணர்ந்திடும்

63 நமக்குமந்த விதிகளென்று எண்ணிடும்
நாயன்வணக்கம் நிதமுந்தேடி தொழுதிடும்

64 செய்யும்செயலே கியாமனுளில் றப்பிடம்
கையும்காலும் மொழிந்துசாட்சி சொல்லிடும்

65 என்று ஆதி மறையில்சொன்ன துணர்ந்திடும்
பெண்டுபிள்ளை சதமுமில்லை யறிந்திடும்

66 பொருளெனக்கு போதுமென்று சொன்னதார்
இருளறைக்கு போகாதிங்கு இருந்ததார்

67 ஜீவனுள்ள மட்டுந்தின்பாய் சோறுதான்
செத்துப்போனுல் வாயில்விளுகும் மண்ணுதான்

68 அரசரென்ருேர் வேளேஒன்றுக் கொருமுடை
அருசிதன்னே அவித்துதின்ப தில்லேதாண்

69 உயிரிருக்கும் வரையி லாண்டி அரசர்தான்
உயிரிளந்தாலி ருவரும்சமம்தானேகாண்

70 தின்றுதூறி போனவர்கள் கோடிகாண்
திருப்பிஇங்கு வந்ததில்லே யுணருகாண்

# இஸ்லாத்தி னடையாளங்கள்.

---

71 தலையும்மொட்டை கத்னுவெட்டி இருந்ததால்
தலையில்தலப்பா நிகாஹுதாடி வைத்ததால்

72 இஸ்லாமென்ற நாமங்கொண்டே னென்றுநீ
எண்ணி இருந்தால் போதுமோ அதை உணருநீ

73 இஸ்லாமென்ற எழுத்தைப்பாரு எத்தனை
இணக்கிஅட்சர மமைத்துவைத்தான் கத்தனே

74 அலிபுஸீனு லாமலிபு மீமுடன்
ஐந்துஹர்பு ஆனதுணரு கல்புடன்

75 கலிமாதொழுகை ஸகாத்துநோன்பு ஹஜ்ஜுடன்
குல்லுமெடுப்பாய் இஸ்லாமென்ற இஸ்முடன்

76 ஐந்துஹர்புக் கானபறுளு ஐந்துமே
அணிந்துவந்தா லந்தநாமங் கிடைக்குமே

77 கிளிகள்காபிர் கலிமாசொல்லு றார்களே
கிறிஸ்தவர்கள் தாடிவைக்கு றார்களே

78 காசிதனக்கு போகுறார்கள் காபிறும்
குழித்துவிரதம் வைக்குகிறார்கள் யாவரும்

79 நாட்டுகொட்டை செட்டிதலையு மொட்டையே
நாணமில்லா காபிர்கதனு வெட்டியே

80 நாடிக்கலி யாணஞ்செய்யுங் காபிர்கள்
நம்க்குமவர்க ளிடையிலுள்ள பர்குகள்

81 தொழுகையல்லால் வேறுமுண்டோ சொல்லுங்கள்
தொழுகையில்லர் தோசியான பேருகள்

82 தொழுகையானது தீனுக்குள்ள கம்பமே
தொழுகைஇளந்தோர் நாறிலாவார் தும்பமே.

## மரண வருத்தம்.

83 சகருத்துவருத்த மானதொரு ஆட்டைத்தான்
சீவனுடனே தோலேஉரிப்பது போலேகாண்

84 அதிலுங்கடுமை யானவருத்த மாகுமாம்
அமல்களில்லா கேடருக்குத் தானேகாண்

85 கறடிபுலிகள் கிளித்தபோதிலும் லேசுதான்
பொறுக்க முடியா வருத்தமாகும் மரணங்காண்

86 பெருநெருப்பில் வெந்துவெடிப்பது லேசுதான்
பெரியதுயரம் துன்பமாகும் மரணங்காண்

87 வெட்டிவெட்டி தூளுசெய்வது லேசுதான்
தட்டயேலா கஷ்டமாகும் மௌத்துகாண்

88 கடிந்தவேலே செய்திருந்த உறுப்புதான்
கிடந்துபதறி நடுங்குமந்த நேரங்காண்

89 கடுமையாக தாகமும்மிக அதிகமாய்
கடுகடுத்து கல்புநடுங்கும் நேரமாய்

90 ஆருமந்த நேரத்திலுனக் காருதான்
அடுத்துவந்துப காரஞ்செவார் சொல்லுகாண்

91 ஆருமுதவா வேளேயாகுந் தருணத்தில்
அமலிருந்தா லுபகாரமாகும் மரணத்தில்

92 என்றஎண்ணம் கல்பிலெண்ணி நிதமுமே
இறையோனேவணக்கஞ் செய்தாலுனக்கு சொர்க்கமே

# நரகுடையோர் உலகை நினைந்து உளறு மொழிகள்.

93 நாயன்வணக்க மிழந்துதுன்யா உகந்தவர்
நாளைமஹ்ஷரி லிந்தவிதமா யுளறுவர்

94 பெண்டுபிள்ளை என்றஎண்ண மெங்கேயோ
பேணிவைத்த முதலுமனையு மெங்கேயோ

95 மூக்கிலணிந்த நத்துமூக்குத்தி எங்கேயோ
மேலும்வேணு மென்றநகைக ளெங்கேயோ

96 கையிலணியுங் காப்புகொலுசு எங்கேயோ
காலிலணியுங் கடகம்தண்டை எங்கேயோ

97 பட்டுவஸ்திரம் பாவடைக ளெங்கேயோ
பிடவைசட்டை சேலைரவிக்கை எங்கேயோ

98 கையில்வளையல் கலகலென்ற தெங்கேயோ
காதில்சிட்டி ஜிமிக்கிஜொலித்த தெங்கேயோ

99 நாளைவேண்டு மென்றஎண்ண மெங்கேயோ
நானுமிருந்த மெத்தை மாளிகை எங்கேயோ

100 காலில்பீலி மிஞ்சிசங்கிலி மினுக்கியே
கடகம்பாசுரம் காட்குதிரிந்தேன் கனக்கவே

101 கையிலணிந்த மோதிரங்க ளெத்தனை
காணுகுறைக்கு கையில்நெளிகாப் பணிந்தனே

102 மேனிமுழுதும் நகைகளிட்டு திரிந்தேனே
மூக்குகுத்தி முகத்தைமினுக்கி இருந்தேனே

103 அனந்தம்நகைகள் வேண்டுமென்று வீணிலே
அணைந்துவணக்க மிழந்துபோனேன் பாழிலே

104 பல்லைமினுக்கி பல்பொடியு மிட்டுநான்
பாகமுடனே திரிந்தலைந்தேன் தெருவில்நான்

105 மஹ்ஷறென்ற நாளுமுண்டு மென்றசொல்
மேதினியில் மறந்திருந்தே னந்தசொல்

106 இந்தவேளை திட்டமுடனே என்னிலே
வந்தவேதனையறிந்து கொண்டேன் தன்னிலே

107 காளைபோலே திண்டுதூறி இருந்துநான்
கடிந்தவேதனை மறந்துபுவியி லிருந்துநான்

108 தாசியாட்டம் கூத்துகுறுசும் பார்த்துநான்
வேசியர்க ளாசைகொண்டு மாய்ந்துநான்

109 வட்டிவாங்கி நிதமுந்தின்று கொழுத்துநான்
பட்டிபோலே வெட்டிபாடு பட்டுநான்

110 நமக்குநமக்கு வேண்டுமென்று முதல்களை
நாடிசேர்த்து விட்டுவந்தேன் வீணிலே

111 என்றன்துயரம் யாரிடத்தில் சொல்லுவேன்
வந்தவிதியால் வெந்துநரகில் போகிறேன்.

## நரக வேதனைகள்.

112 தோழிதோழனென்று தோள்க்கை போட்டனே
தோழிஇங்கு துயரம்நீக்க காணேனே

113 அண்ணனக்கா ளென்றுசொல்லி இருந்தனே
அவர்களெந்தன் துயரம்நீக்க காணேனே

114 மாமன்மாமி எந்தன்மனைவி என்றனே
மூவரிங்கு துயரம்நீக்க காணேனே

115 சாச்சசாச்சி மதுனிமைந்த னென்றேனே
சகலபேரை இப்பமிங்கே காணேனே

116 தந்தைதாயும் தன்பமென்று இருந்தனே
துன்பம்நீக்க யாருமிங்கே காணேனே

117 யாருமுதவா வேளைஇதுவென் றறிந்தனே
யாரிருந்தும் பலனுமில்லை ஹக்கனே

118 ஷம்ஸா வல்லயம் போலமுன்னில் முடுகுதே
சிரசின்மூளை உருகி ஆறு யோடுதே

119 பாலகர்சி ரோமமெல்லாம் பழுக்குதே
பாந்தள்தேள்பல வர்தினங்கள் பாயுதே

120 புவியும்வானம் பிழந்துபூபோல் சிவக்குதே
பிண்டம் ஒன்றாய் அண்டம்போலே யாகுதே

121 நெஞ்சுகள்தடு மாறிநெத்திகள் சுளியுதே
நஞ்சுதின்றவர் நடுங்குமாப்போல் நடுங்குதே

122 கண்ணின்முளியும் கல்பினீரல் கலங்குதே
கையும்காலும் நடுங்கிபதறி சிதறுதே

123 பாம்புபூரான் வயற்றைகடித்து இளுக்குதே
பகராமுடியா வருத்தம்மிகுதி யாகுதே

124 தந்தைதமக்கை எந்தன்மனைவி மைந்தனே
இந்தவருத்த மேந்துகொள்ள காணேனே

125 எந்தனுடலை தங்கம்போலே வளர்த்தனே
வெந்துநரகி லுருகிறனும் போறேனே

126 அழுதுஅழுது கண்ணுமுகமும் வீங்கியே
அழுதகண்ணீ ராறுபோலே ஒடுதே

127 தேடிநண்டு தேளுவந்து கொட்டுதே
ஓடிப்போக இடங்களில்லா முட்டுதே

128 அங்குமிங்குந் திரிந்துஎன்றன் வாணாளை
பங்கபளிப்பி லாக்கிவிட்டேன் வீணிலே

129 நரகின்கருவி கொண்டுஅபத்தை துளைக்கிறார்
அருகிலிருப்போர் நாறுதென்று விலகிறார்

130 பிற்புறத்தில்ஈட்டிகொண்டு குடையுறார்
பெரியவேதனை பொறுக்கமுடியா தாக்குறார்

131 ஆஹ்அப்ஸோ ஸாருமில்லை ஆண்டவா
யேகனீயே துன்பம்நீக்கி காக்குவாய்

132 ஹாதிஎன்ற பேருஉனக்கே சொந்தமே
நீதிநெறியும் நீகொடுத்தா லுண்டுமே

133 என்றன்பிழையை பொறுத்துஎன்னைக் காருநீ
உன்றன்கைறுல் அன்பியாவுக் காகநீ

134 கேட்டவர்க்கு கொடைகொடுக்கும் வல்லவா
தேட்டமுடயோர் நாட்டத்திற்குரித் தானவா

135 பாவிநான்படும் பாடுஉனக்கே வெளிச்சமே
கூவிஉன்னிடம் கேட்க எனக்கு கூச்சமே

136 எந்தனிருளை நீக்கிஉன்றன் றஹ்மத்தை
எனக்குகொடுத்து காண்பிவைஉன் சமுகத்தை

## உலகின் வஸ்து யாவுமிரவல்.

137 ஓடிஓடித் தேடினுலும் ஒட்டைச்சாண்
வயற்றின்பசியை அமர்த்ததின்பா யுண்ருகாண்

138 அன்னைதந்தை பெண்டுபிள்ளை இரவல்காண்
அருமைஅண்ணன் மச்சான்மைந்த னிரவல்காண்

139 ஓடித்தேடி வைத்தசொத்து யாவுந்தான்
படுத்தபாயு உடுத்ததுணியு மிரவல்காண்

140 உலகிலிந்த வாழ்வுநிலைத்த தெவர்க்குகாண்
உற்றுப்பார்த்தால் செத்துப்போக வேணுங்காண்

141 கூடகோபுரம் மாடமாளிகை இரவல்காண்
கூடிஇருந்து தின்றசோறு மிரவல்காண்

142 கோரிமுடிக்கும் கூந்தல்மயிரு மிரவல்தான்
குலுக்கிக்காட்டும் தங்கநகையு மிரவல்காண்

143 கையிலணையும் மோதிரங்களிரவல்காண்
காலில்போடும் செருப்புஜோத்தா இரவல்காண்

144 பெண்டுபிள்ளை பெரிதுஎன்று எண்ணித்தான்
பெரியவீட்டின் அமலைமறக் காதேகாண்

145 மனைவியுடனே மகிழ்ந்துபேசும் பேச்சுதான்
மற்றுமெல்லா இச்சையாவும் பிச்சைதான்

146 போதும்போதும் போயிடுவாய் நீயுந்தான்
போகமுன்நீ குன்ஹூதாத்தை உணருகாண்

147 ஆதம்அய்யூப் நபிகளெங்கே சொல்லுகாண்
அவர்கள் மனைவி ஹவ்வாறஹ்மா எங்கேகாண்

148 மூசாஈசா தேசமாண்ட சுலையுமான்
யூசுபுயஹகூப் நபிகளெங்கே சொல்லுகாண்

149 மன்னவந்தன் முஹம்மதென்றோ ரெங்கேகாண்
மற்றுமன்பி யாக்களெல்லாம் மெங்கேகாண்

150 உந்தனன்னை தந்தைதமக்கை எங்கேகாண்
சொந்தகணவி மைந்தன்யாவு மெங்கேகாண்

151 சிரித்திருந்த சுகங்களெங்கே சொல்லுகாண்
உருத்தாவிறைச்சி தின்றஜடல மெங்கேகாண்

152 பாட்டிபாட்டன் பூட்டிபூட்ட னெங்கேகாண்
துஷ்டன் பிர்அவ்ன் நம்றூதெங்கே சொல்லுகாண்

153 ராஜராஜா வென்றுசொன்னோ ரெங்கேகாண்
ராணுவங்கள் செய்தகாறூ னெங்கேகாண்

154 வல்லஆதி நீதிசொல்லா லருளினன்
குல்லுஷெய்யின் ஹாலிக்குன்நீ உணருகாண்

(நரகத்தின் வாதை மோட்சத்தின் பாதை முற்றிற்று.)

## முனாஜாத்து.

சலவாத்துல் கரீமிஷஹ்றன் வஹவ்லா என்ற மேட்டு.

1 எல்லாபுகழ்கள்க்குரிய இறையோனே அல்லா
வல்லநபிபேரில் ஸல்லிஅல்லாஹூ அல்லா

2 நாங்களடிமைகள் கேட்கும்வரங்களை ஏந்து
ஒங்குங்கிருபைகள் செய்துபிழைபொறு அல்லா

3 அறிந்தஉலமாக்களிடத்தில் அறிவுகள் கேட்டு
அறிந்தபடி நாங்களுன்னை வணங்கச்செய் அல்லா

4 வஹ்லுஉபதேசங் கேட்டுகல்புகள் தெளிவாய்
மிகுதியாயெங்கள் பாவம்நீக்கு வாயல்லா

5 உன்னைஅறிந்தெங்கள் மனங்களுள் பக்கஞ்சாடா
மன்னவாஎங்கள் மனதைஒளிவாக்கு அல்லா

6 குருஆனையும் வேதநூலான யாவும்
சிறமமுல்லாமல் நாங்களோதச்செய் அல்லா

7 இல்முபதினாலே நாங்கள்நன்றாக ஓதி
தன்மையாயுன்னை யுணரஉதவிசெய் அல்லா

8 ஷறகுக்கிடரான கெட்டபித்ஆத்தை நாங்கள்
அறவேசெய்யாம லெங்களைக்காரு அல்லா

9 க்ஷிர்க்கு குபிருன மதபேதகம் நீங்கி
ஷறகின்நடைகொள்ள எங்கள் மனதாக்கு அல்லா

10 கூடுவேடிக்கை கொட்டுகெடுதிகள் பலதும்
நாடிப்பார்க்காம லெங்களைக்காரு அல்லா

11 வேசித்தனமின்னும் கெட்டவீணும் ஸினுவும்
வாசஞ்செய்யாம லெங்களைக்காரு அல்லா

12 ராஜர் துன்பங்கள் எங்கள்பேரில் வராமல்
ராஜராஜாவே எங்களைக்காரு அல்லா

13 எங்கள் காலங்க ளெல்லாம் நன்ருக நாங்கள்
சங்கைசுகம்பெற்று வாழச்செய்யெங்க ளல்லா

14 எங்கள்வெள்ளாமை எங்கள்யா பாரத்தில்நீ
சங்கைலாபம் விளைச்சலாக்கெங்க ளல்லா

15 சாவிநஷ்டங்கள் எங்கள்தொழிலில் வராமல்
காவலாகவேபறக்கத் தாக்கெங்க ளல்லா

16 இஸ்லாமானேர்க ளெல்லாமந்தந்த ஊரில்
துஸ்மனைநீக்கி ஒத்து ஆளச்செய் அல்லா

17 பொல்லாச்சிலவேதும் முஸ்லிமீனில் வராமல்
வல்லவாகாத்துக் கிருபைசெய்யெங்க ளல்லா

18 காலம் தவருமல் மழைகள்நன்ருகப் பெய்ய
ஆலமுடயோனே கிருபைசெய்யெங்க ளல்லா

19 கொஞ்சமுப்பஞ்சம் முஸ்லிமீனில் வராமல்
சஞ்சலங்கள் தொடாமல் காரெங்க ளல்லா

20 எங்கும் திரிந்தெங்கள் குடும்பத்தில் நாங்கள் வந்து
எங்களொடுக்கங்கள் ஈமானேடாக்கு அல்லா

21 கலிமாதெளஹீதை சொல்லிக்கொண்டெங்கள் றூஹு
கலக்கமில்லாமல் பிரியும்படியாக்கு அல்லா

22 சொர்க்கத்திலுன்னைநாங்க ளெப்போதும் பார்க்க
இரக்கஞ்செய்யெங்கள்பேரில் றகுமானே அல்லா

23 தென்னகர்கோடை செய்யிதுமுகம்மது பிழையை
மன்னவாபொறுத்து கிருபைசெய்யெங்கள் அல்லா

24 வெல்லும் ஸலவாத்தை எங்கள் நபிபேரில் நித்தம்
நல்ல ஆல்கள் ஸஹாபா மீதுஞ்சொல் அல்லா.

(சம்பூர்ணம்.)

## தலைமுழுகும் நாட்களின் குணம்.

### தோங்கல்.

கண்ணின்மணியான நபிஇறசூல் கருணைஅலியாரை அழைத்துச்சொன்ன
மின்னின்வடிவான ஹதீதுதன்னை மதாரிஜுன்னுபுவ்வா போலொத்ததில்
முன்னர்உலமாக்களெடுத்தோதினர் முழுகும்முஸ்லீங்க ளறியவேண்டி
பன்னுங்காபிரின்செயலெடாமல் பகருங்கிழமையில் முழுகிக்கொள்வீர்

த்ரானேனருள்பெற்றஎன்அலியே தலைதான்முழுகினல்சொல்லக்கேளும்
வேனைஞாயரில்முழுதால் வீரியத்துடன்பிலனும்போகும்
ஆனைதிங்கள் முழுகினுக்கா லாகுஞ்செல்வமும் இரணமுண்டாம்
தானைசெவ்வாய்முழுகினுக்கால் தளுமைஆயாசம்மட்டிடாதே

ஆச்சைபுதன்தனில் முழுகினுக்கா லவன்றனுடலெல்லாம் சுவாத்தியமாம்
மூர்ச்சையுடன்முதல்குறைந்துபோகும்முசீபத்தடையுமாம்வியாழத்திற்கு
சூட்சமாய்வெள்ளி முழுகநன்று சொரியும்நிகுமத்து பெருகிவரும்
தாட்சையுடஞ்சனிமுழுகினுக்கால் தணிந்துபோம்புத்திகுறைந்துபோமே

## வெற்றிலையின் நற்குண வசனம்.

வெற்றிலையானது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கட்கென்றும் நபி சுலைமான் அலைஹிஸஸ்லாமவர்கட்கென்றும் கிலாபு எனும் விகர்ப்பம் சொல்லப்பட்டிருக்கிறது. இருவர்களிலொருவர்கட்கு செய்த்தான்

பாம்பின் ரூபமாய் வெற்றிலையை கொண்டுவந்து கொடுக்கும்போது அதன் தலையும் வாலையும் பிடித்துக்கொண்டு வந்து கொடுத்ததால் தலையாகிய காம்பையும் அதன் துடாராகிய பெரிய நரம்புகளையும் அதன் வாலையும் நீக்கி நபியவர்கள் தின்றதால் இக்காலத்திலுமவ்விதமே சிலர் தின்றுவருகிறார்கள். அவ்விதம் தின்றுவருவதில் அநேக உபயோகமுண்டு. இன்னும் வெற்றிலை உஷ்ணமென்றும் சீதள உஷ்ணமென்றும் சொல்லப்படுகிறது. வெற்றிலையை தின்கிறதால் வாயின் ஈறுகளையும் பல்லுகளையும் கெட்டியாக்கும். வாயின் வீச்சத்தை விலக்கும். மலத்தை சுத்தியாக்கும். பசியை உண்டாக்கும். தாதை பிலப்பிக்கும். தலையின் நீரையும் முகச்சுரப்பையும் மாற்றும். மனச்சந்தோஷத்தை தரும் ஜடலத்தை உறப்பாக்கும். கோபத்தை நீக்கும். முகத்தில் பளபளப்பைக் கொடுக்கும். இதுவுமல்லாமல் வாய் வருத்தங்கட்கு நல்ல மருந்து என்று ஹுகமாக்கள் ஒத்துக்கூடி சொன்னதை இமாம் ரூஸி றலியல்லாகு அன்கு சொல்லி இருக்கிறார்கள். இன்னும் ரெத்தபோக்குள்ள வியாதிகட்கு உபயோகஞ்செய்யுமென்றும் வந்திருக்கிறது. உறுப்புகளில் காயப்பட்டு வருகிற ரெத்தத்தை வெற்றிலைச்சாறு மாற்றி வைக்குமென்றும், இரைக்குடல், கல்பு, ஈரல் இவைகளையெல்லாம் கெட்டியாக்கும். அஸ்மரிஎன்ற நீரடைப்பு கல்லை உடைக்கும் திரேக அசதியை மாற்றும். பாடம், புத்தி இவைகளை உண்டாக்கும். மறதியை குறைக்கும். மிகுதியாய் தின்பது கொண்டு நாவை தடிப்பாக்கும். ஒஜீபனத்தைக் குறைக்கும். உஷ்ண ரோகிகட்கு துவர்க்கத்தில் சற்று தலைசுத்தை உண்டாக்குமென்றும் இவைகளை யெல்லாம் (தஸ்ஹீலுல் மனுபிவு) (ததுக்கிறத்து) (மின்ஹாஜுல்பயான்) காமூஸுல்முஹீது) இவைகளிலும் இவைபோன்ற சில கிரந்தங்களில் நின்றும் தெரிந்தெடுக்கப்பட்டதாயிருக்கும்.

சுண்ணும்புடைய நற்குணங்களைப்பற்றி கிதாபுகளில் காணப்படவில்லை. ஆயினும் வெற்றிலையுடன் சுண்ணும்பைக்கூட்டி திங்கவேணுமென்று (ததுகிறத்து) என்ற கிதாபில் வருகிறது. இன்னும் சுண்ணும்புகூட்டாமல் தின்னுல் வெற்றிலையினுடைய இன்பம் தெரியாதென்றபடியால் அது கூட்டிதான் தின்கவேணுமென்று இபுனுல் பைத்தாரி இமாம் அவர்களுடைய (முபுறதாத்து) எனுங் கிரந்தத்தில் வருகிறது. சுண்ணும்பை கலக்கி தெளிந்தெடுத்த தண்ணீரால் அதிக குணமிருக்கிறதென்றுஞ் சொல்லப்படுகிறது..

பாக்கு சீதளஉஷ்ணம், பச்சை பாக்கு வாயில் வரும் வியாதி ...ம் உஷ்ணமான வெட்டைகட்கும் உபயோகமாகும் பல்லு, ...ன், நரம்பு இவைகளை உறப்பாக்கும். வியர்வையை முறிக்கும், அரைத்து குடித்தாலும் திரேகத்தில் பூசினாலும் நோவுகள் குணமாகும். ...ண் வியாதிகட்கு இதைக்கொண்டு உபயோகமுண்டாகும். இவைகளை ...ததுகிறத்து மின்ஹாஜுல்பயான், (காமூஸு) இவைகளில் நின்றும் தெரிந்தெடுக்கப்பட்டதாயிருக்கும்.

(முற்றிற்று)

---

இப்புஸ்தகத்திலுள்ளவைகளில் ஏதேனும் தமிழிலோ அல்லது வேறு பாஷைகளிலோ எனது உத்தாரமன்றி யாரும் அச்சிடலாகாது. 1918-ல் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இங்ஙனம்,

ஆ. செ. மு. ஷெய்கு செய்யிது
முஹம்மது ஆலிம் சாஹிபு,
பெருமாள் குளம்தெரு,
கோட்டாறு, நாகர் கோவில்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 10 | குகா | குதா |
| 6 | 2 | நயிகிலுறு | நபிகிலுறு |
| 7 | 13 | வைத்திட்ட | வைத்திட |
| 8 | 8 | முகியித்தின் | முகியித்தீன் |
| 11 | 25 | வஉஸஃபத்திஸ | வஉஸஃபத்தின் |
| 22 | 2 | எங்கித்துடித்து | ஏங்கித்துடித்து |
| 22 | 22 | மய்கிருய் | மாய்கிருய் |
| 24 | 21 | தொழுகையில்லர் | தொழுகையில்லா |
| 26 | 16 | காட்குத்திரிந்தேன் | காட்டித்திரிந்தேன் |
| 29 | 17 | உளக்கே | உனக்கே |
| 31 | 22 | மனங்களுள் | மனங்களுடன் |
| 31 | 25 | சிறமமுல்லாமல் | சிறமமில்லாமல் |

## கட்டளை கலித்துறை.

மேனுக மோடு ஜெய புவி யாளவி நாயுளவா
நூலகமாம் பல அத்வித மாதவனுட்பமதை
தாலகமீது தெளிவுற செய்து தமியனை யாள்
ஞாலமேலென் குருசாகு லமீ தெனும் நாயகமே.

## ரெதபந்தம்.



# அறிவிப்பு.

இப் புஸ்தகம் தேவையானவர்கள் எம்மிடத்திலு
கோட்டாறு புஸ்தக ஷாப் வியாபாரம்
மீ. ம. மு முஹம்மதுகனிராவுத்தர் அவர்களிடத்
திலும், சிங்கப்பூர் துல்லாயர் ஸ்திறீட் குச்சுப்பள்ளி
யில் கனம் கதீபு சாகிபு அவர்களிடத்திலும்,
இளையாங்குடி சாலையூர் வடக்கு பள்ளி ஜனாப் பேஷ்
இமாம் அவர்களிடத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்.